**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 153 of 2014
Deposition of witness for — Prosecution PW1 / Defence / Court

Name : ராமதாஸ்
Father Name : சுப்பையா
Village :பாண்டியன் நகர்
Taluk :விருதுநகர்
Caste :
Calling :
Religion :
Age :52

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of February 2026.

1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது பாண்டியன் நகர், விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் இந்து முன்னணி அமைப்பில் பாண்டியன் நகர் பகுதியில் தலைவராக இருந்து வருகிறேன். கடந்த 13.09.2013ம் தேதி காலை 9.00 மணியளவில் விருதுநகர் சுப்பையா நாடார் பள்ளி அருகே 200 மீட்டர் தொலைவில் எனது உறவினர் பாண்டி, மாரியப்பன் ஆகியோரின் மகன்களிடம் பேசி கொண்டிருந்தேன். அப்போது அந்த வழியாக ஒரு டாடா சுமோ காரில் காவல் ஆய்வாளர் மூக்கன், சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார், சூலக்கரை காவல் ஆய்வாளர் பார்த்திபன் ஆகியோர்கள் வந்தனர். டாடா சுமோவில் இருந்து கீழே இறங்கிய அவர்கள் என்னை பார்த்து இங்கு என்னடா பண்ணி கொண்டு இருக்கிறாய் தேவிடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார்கள். நான் அவர்களிடத்தில் பொறுமையாக எனது உறவினர்கள் மகன்களிடம் பேசி கொண்டிருப்பதாக நான் கூறினேன்.

2) நீ இந்து முன்னணி அமைப்பில் தலைவராக எனக்கு என்னடா தாயோழி தேவிடியா மவனே என்று என்னை காவல் ஆய்வாளர் மூக்கன் எனது தொண்டையை பிடித்து இத்தோடு செத்து தொலைடா என்று சொல்லி 3 பேரும் சேர்ந்து கழுத்தை நெறித்தனர். அதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். 3 பேரும் என்னை கையாலும், காலில் அணிந்திருந்த ஷீ வால் மிதித்தும், எனது சட்டையை கிழித்தனர். 3 பேரும் கையில் வைத்திருந்த துப்பாக்கியை எனது நெற்றியில் வைத்து இனிமேல் இந்து முன்னணி அமைப்பில் இருந்தால் உன்னை சுட்டு கொன்று விடுவோம் புண்ட மவனே என்று அசிங்கமான பேசினர். அவர்கள் கொண்டு வந்த காரில் என்னை ஏற்றி விருதுநகர், கிழக்கு காவல்நிலையம் கொண்டு சென்றனர். அங்கு வந்து எனது பனியன் மற்றும் வேஷ்டியை அவிழ்ந்துவிட்டு என்னை ஜட்டியுடன் உட்கார வைத்து அடித்தனர். இனிமேல் நான் இந்து முன்னணியில் இருக்கக்கூடாது என்றும், இந்த ஏரியாவில் நீ இருக்கக்கூடாது என்றும் வேறு எங்காவது சென்று விடு என்றும் துப்பாக்கியை வைத்து மிரட்டினார்கள். அங்கே நேரடியாக ஈஸ்வரன்,ராமச்சந்திரன், கண்ணன், ஆண்டனி, பட்டமுத்து, ராஜா, அருள்ராஜ் ஆகியோர்களுக்கு நேரடியாக தெரியும். பகல் 2.00 மணியளவில் என்னை விருதுநகர், அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு மருத்துவர் என்னிடம் பிரஷர் மற்றும் சுகர் உள்ளதா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன்.

3) மீண்டும் என்னை விருதுநகர், கிழக்கு காவல்நிலையம் அழைத்து வந்து என்னை மீண்டும் தாக்கினார்கள். எனக்கு சுகர், பிரஷர் இல்லை என்பதால் எவ்வளவு அடித்தாலும் தாங்குவாய் என கூறினார்கள். மதியம் 3.20 மணியளவில் என்னை முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு என் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து விருதுநகர், நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் அழைத்து சென்றனர். கனம் நீதிபதி அவர்களிடம் எனது உடம்பில் உள்ள காயங்களை

சட்டையை கழற்றி காட்டினேன். அவர்கள் என்னை பார்த்து விட்டு, நீதிமன்றத்தில் சற்று அமருமாறு கூறினார். அதன் பின்னர் எனக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார். சார்பு ஆய்வாளர் சுரேஷ் குமாருடன் என்னை மருத்துவமனைக்கு அனுப்பினால் என்னை சுட்டுவிடுவார் என்றும் அதனால் வேறு காவலர் மூலம் மருத்துவமனைக்கு அனுப்புமாறு நீதிபதியிடம் கூறினேன்.

4) அதனால் கனம் நீதிபதி அவர்கள் வேறு 4 காவலர்கள் மூலம் என்னை விருதுநகர், மாவட்ட சிறைச்சாலைக்கு அழைத்து சென்றனர். அங்கு காவல் அடைப்பு அறிக்கையை பார்த்த சிறை கண்காணிப்பாளர் என்னை அங்கு சிறையில் அடைக்க முடியாது என்று கூறினார். அதற்கு அதனை நான் பார்த்து கொள்வதாக சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார் சொன்னார். சிறை காவலர்கள் என்னை சிறைக்குள் அனுமதிக்க மறுத்தனர். பின்னர் என்னை மதுரை, மத்திய சிறைச்சாலையில் அடைத்தனர். மத்திய சிறையில் உள்ள மருத்துவமனையில் நான் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். 7 நாட்கள் கழித்து பிணையில் வந்த பின்னர் விருதுநகர், அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றேன். 22.09.2013ம் தேதி மதுரையில் உள்ள தென்மண்டல ஐ.ஜி–யிடம் புகார் மனு கொடுத்தேன். விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிம் புகார் மனு கொடுத்தேன். மேற்படி புகார் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் தனிபுகாராக தாக்கல் செய்துள்ளேன்.

5) காவல் அடைப்பு அறிக்கை சான்றிட்ட நகல் **பு.த.சா.ஆ.1** ஆகும். 22.09.2013ம் தேதி எதிரிகள் மீது நான் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் விருதுநகர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு கைநகல் **பு.த.சா.ஆ.2** ஆகும். 22.09.2013ம் தேதி எதிரிகள் மீது நான் காவல்துறை துணை தலைவர், மதுரை சரகம் அவர்களிடம் கொடுத்த புகார் மனு கைநகல் **பு.த.சா.ஆ.3** ஆகும். 21.10.2013ம் தேதி விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் எடுத்தற்கான அறிக்கை **பு.த.சா.ஆ.4** ஆகும். 21.09.2013ம் தேதி விருதுநகர்,

ஜே.ஜே.கிளினிக்கில் எடுத்த இ.சி.ஜி அறிக்கை **பு.த.சா.ஆ.5** ஆகும். நாங்கள் வருடம், வருடம்விநாயகர் சிலை வைப்பது வழக்கம். அந்த வருடம் விநாயகர் சிலை வைப்பதற்கு எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்பதால் உயர் அதிகாரிகளிடம் சென்று விநாயகர் சிலை வைப்பதற்கு அனுமதி பெற்றததால் எதிரிகள் என் மீது பகையில் இருந்தனர். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)